கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் டிசம்பர் மாதம் 10ம் தேதி புதன்கிழமை

இடைநிலை மனு எண்.2/2024
இன்
அசல் வழக்கு எண்.231/2024

-----

1) அழகம்மாள்
2) முத்துலெட்சுமி
3) வெள்ளைத்தாய் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1) ராமக்காள்
2) முத்துராம்
3) சின்னராம்
4) ராமக்காள்
5) கிருஷ்ணமூர்த்தி
6) விநாயகமூர்த்தி
... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 28.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.S.திருநாவுக்கரசு அவர்கள்

ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

தாவாச்சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ அல்லது அவரது முகவர்களோ அல்லது உரிமை கோரும் எவருமோ தாவா சொத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்த மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) அசல் வழக்கானது, தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக் கோரியும், அதனை தொடர்ந்து பிரதிவாதிகள்,

அவர்களது ஆட்கள் மற்றும் முகவர்கள் எந்த வகையிலும் தாவா சொத்தில் கட்டிடம் கட்ட கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே காரணத்திற்காக ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கோரியுள்ள பரிகாரங்கள் எவ்வகையிலும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை அலைக்கழிவு செய்யவேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் வேண்டுமென்றே பொய்யான காரணத்தின்பேரில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>3. தீர்வு</u>:–**

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது.

3.1) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர்கள் நிவாரணம் பெற வேண்டும் என்றால்,

(i) மனுதாரர்களின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரர்களுக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும்.

3.2) மேலும், மேற்படி அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமாக உள்ள நிலையில், மேற்படி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இடைக்கால மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்கள்/வாதிகளுக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பால் நிரூபணம் செய்யாததாலும், அசல் வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு

விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதால், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடையுறுத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 10.12.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.12.10 14:17:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு**:–

1) **மனுதாரர்கள் தரப்பு சாட்சி:** இல்லை

2) **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

3) **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :** இல்லை

**4) <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | |
|---|---|
| எ.சா.ஆ.1 | 19.04.1982ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| எ.சா.ஆ.2 | 14.06.2017ம் தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| எ.சா.ஆ.3 | 18.06.2017ம் தேதியிட்ட 10(1) சிட்டா கணினி நகல். |

**5) <u>நீதிமன்றம் தரப்பு சாட்சி:-</u>** இல்லை

**6) <u>நீதிமன்றம் தரப்பு சான்றாவணங்கள்</u>:-**இல்லை

ESWARAN
MANIKANDAN

Digitally signed by
ESWARAN
MANIKANDAN
Date: 2025.12.10
14:17:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.02/2024
அசல் வழக்கு எண்.231/2024
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 10.12.2025